


ஒளி - 10 கீற்று - 03 புரட்டாதி - மார்கழி 2017 SEPTEMBER - DECEMBER 2017

இது எசெக்ஸ் தமிழ்க் கழகத்தின் தயாரிப்பு.
THIS IS AN ESSEX TAMIL SOCIETY PRODUCTION.



America இருபதாம் நூற்றாண்டில் ஒரு பெரிய சக்திவாய்ந்த நாடாகத் திகழ்ந்தது என்பது அனைவரும் அறிந்ததே. ஆனால், 2017 கோடைகாலத்தில், அழிவு இயற்கையால் மட்டுமல்ல, மனிதனாலும் ஏற்பட்டிருக்கிறது. ஆவணி மாதக்கடைசி வாரங்களில், Harvey எனப் பெயர் சூட்டப்பட்ட இயற்கைப் பேரழிவு, தெற்கிலுள்ள Texas எனும் மாநிலத்தைப் பாதித்து, 43,000க்கும் மேற்பட்டவர்களை இடம்பெயர வைத்துள்ளது.

அதுமட்டுமா? North Korea, உருவத்தில் சிறிய ஒரு நாடு, அணு ஏவுகணைகளால் Americaவை மீண்டும் மீண்டும் நச்சரிக்கிறது. அதனால், உலக மக்கள் ஒரு அணுப்போர் நடைபெறுமோ என்று பயப்படுகிறார்கள்.

Over the Summer break, America has been attacked by both natural and man-made disasters. Over the last weeks of August, Storm Harvey has hit Texas where more than 30,000 have been displaced. Prior to this and in the background occurs another political storm that is brewing on an international scale - that is, between the two unpopular leaders Kim Jong Un of North Korea and Donald Trump of America. Missiles have been launched from Pyongyang causing increased tensions in the relationship between North Korea and the rest of the world.

## உள்ளடக்கம் CONTENTS

பக்கம் 1 / Page 1
- சமீபச் செய்திகள் / Recent News

பக்கம் 2 / Page 2
- பாடசாலை நாட்காட்டி / School Calendar
- 2017-2018 வகுப்புக்கள் / 2017-2018 Classes

பக்கம் 3 / Page 3
- விவேகம் எனும் உன்னத ஆற்றல் (கட்டுரை) / The Skill of Perception (Article)

பக்கம் 4 / Page 4
- தமிழ் இலக்கியமும் இளையோரும் (கட்டுரை)/ Tamil Literature for Youngsters (Article)

பக்கம் 5 / Page 5
- கோயில் திருவிழாக்கள் 2017 / Temple Festivals 2017

பக்கம் 6 / Page 6
- மாணவர்கள் பக்கம் / Students' Side (எசெக்ஸ் தமிழ் அக்கடமி) / (Essex Tamil Academy)

பக்கம் 7 / Page 7
- விளம்பரம் / Advertisement

பக்கம் 8 / Page 8
- துயர் பகிர்வோம் (திரு ந. ராஜகுமார்) / Obituary (Mr N. Rajakumar)

# பாடசாலை நாட்காட்டி
# SCHOOL CALENDAR
## புரட்டாதி - மார்கழி 2017
## September – December 2017

| | |
|---|---|
| 08.09.2017 | தவணை ஆரம்பம்<br>புதிய மாணவர்களைச் சேர்க்கும் நாள்<br>Start of Academic Term -<br>New Admissions Day |
| 15.09.2017 | வெள்ளிக்கிழமை - Normal School Friday |
| 22.09.2017 | வெள்ளிக்கிழமை - Normal School Friday |
| 29.09.2017 | தமிழ்ப் பாடசாலை நடைபெறாது<br>TAMIL SCHOOL CLOSED |
| 06.10.2017 | நவராத்திரி – வாணி விழா<br>Navarāttiri - Vāṇi Viḻā |
| 13.10.2017 | வெள்ளிக்கிழமை - Normal School Friday |
| 20.10.2017 | வெள்ளிக்கிழமை - Normal School Friday |
| 27.10.2017 | இடைத்தவணை விடுமுறை<br>Half-Term Holiday |
| 03.11.2017 | வெள்ளிக்கிழமை - Normal School Friday |
| 05.11.2017<br>ஞாயிறு<br>Sunday | சைவசமயப் பரீட்சைகள்<br>(விவேகானந்த சபை, இலங்கை)<br>Saiva Religion Examinations<br>(Vivekananda Society, Sri Lanka) |
| 10.11.2017 | வெள்ளிக்கிழமை - Normal School Friday |
| 17.11.2017 | வெள்ளிக்கிழமை - Normal School Friday |
| 24.11.2017 | மாவீரர் நாள் சிறப்புக் கூட்டம்<br>Remembrance Day Special Assembly |
| 01.12.2017 | வெள்ளிக்கிழமை - Normal School Friday |
| 08.12.2017 | வெள்ளிக்கிழமை - Normal School Friday |
| 15.12.2017 | நத்தார் விழா - தவணை இறுதி நாள்<br>Christmas Celebrations –<br>End of Academic Term |

# 2017-2018 வகுப்புக்கள்
# 2017-2018 Classes

### சிறுவர் நிலை *(Nursery)*
ஆசிரியர் : திருமதி சுமதி பாஸ்கரன்
Teacher : Mrs Sumathy Baskaran
(Exit : Door 2)

### வளர்நிலை 1 *(Grade 1)*
ஆசிரியர் : திருமதி விஜி நரேந்திரன்
Teacher : Mrs Viji Narenthiran
ஆசிரியர் : திருமதி ராஜேஷ் சிறீகாந்தன்
Teacher : Mrs Rajesh Srikanthan
(Exit : Door 1)

### வளர்நிலை 2 *(Grade 2)*
ஆசிரியர் : திருமதி சுமதி காண்டீபன்
Teacher : Mrs Sumathy Kandeepan
ஆசிரியர் : திருமதி சுஜிந்தா பிறேம்ராஜ்
Teacher : Mrs Sujintha Premraj
(Exit : Door 2)

### வளர்நிலை 3 *(Grade 3)*
ஆசிரியர் : திரு கந்தையா ஜெயகுமார்
Teacher : Mr Kandiah Jeyakumar
(Exit : Door 3)

### வளர்நிலை 4 *(Grade 4)*
ஆசிரியர் : செல்வன் அஜந்தன் ஜெயகுமார்
Teacher : Master Ajanthan Jeyakumar
(Exit : Reception)

### வளர்நிலை 5 *(Grade 5)*
ஆசிரியர் : திருமதி கலைவாணி குலேந்திரராஜா
Teacher : Mrs Kalaivani Kulenthrarajah
(Exit : Door 3)

### வளர்நிலை 6 *(Grade 6)*
ஆசிரியர் : திருமதி பிரியா செல்வேந்திரமூர்த்தி
Teacher : Mrs Priya Selvanthiramoorthy
(Exit : Door 3)

### வளர்நிலை 7 *(Grade 7)*
ஆசிரியர் : திருமதி தர்சினி தயாபரன்
Teacher : Mrs Tharjini Thayaparan
(Exit : Door 1)

### வளர்நிலை 8 – 10 *(Grades 8 - 10)*
ஆசிரியர் : திருமதி உமா ஜெயகுமார்
Teacher : Mrs Uma Jeyakumar
(Exit : Door 1)

Door 3 | *Reception* | Door 2 | Door 1 | Gate

# விவேகம் எனும் உன்னத ஆற்றல்

ஒவ்வொரு மனிதனுக்கும் ஓர் இயல்பான சக்தி உண்டு; உரிமை உண்டு. அது, தன் தேவைகளைத் தானே தேர்ந்து எடுக்கும் அதிகாரம். குழந்தைப் பருவத்தில், பெற்றோர்களே, கண்டறிந்து என்ன வேண்டும் என்பதைக் கேட்டுத் தெரிந்துகொண்டு அது நியாயமான விருப்பமாக இருந்தால் அதை நிறைவேற்றி வைப்பவர்கள் நல்ல பெற்றோர்கள். இன்றைய குழந்தைகள் தங்களுக்குத் தேவையான எதுவானாலும் தாங்களே தேர்ந்தெடுக்க வேண்டும் என்று அடம்பிடிப்பது மட்டுமல்ல; பெற்றோர்களிடம் அடம்பிடித்து வாங்கியும் விடுகிறார்கள்.

நாம் பெரியவர்களாக வளர வளர இந்தத் தேர்ந்தெடுக்கும் உரிமையைப் பெரிதும் பயன்படுத்துகிறோம். இந்த உரிமை மறுக்கப்பட்டால் கோபப்படுகின்றோம், மன அழுத்தம் அடைகிறோம். நாம் அடையும் இன்பமோ, துன்பமோ இந்தத் தேர்ந்தெடுக்கும் ஆற்றலை, நாம் எவ்வாறு பயன்படுத்துகிறோம் என்பதைப் பொறுத்தே அமைகிறது. நல்லது, கெட்டது இரண்டுமே கடவுளால்தானே உருவாக்கப்பட்டுள்ளன. இதில் எதை நாம் தேர்ந்தெடுத்தாலும் அதன் விளைவுகளுக்குக் கடவுள்தானே பொறுப்பு என்று சிலர் கேட்கலாம். கடவுள் தீமையைப் படைக்கவில்லை. இருள் என்ற ஒன்று இல்லை. ஒளி இல்லாத காரணத்தால்தான் இருள் உருவாகியது.

அறிவைக் கொடுத்த ஆண்டவன் விவேகத்தையும் நமக்குத் தந்துள்ளான். விவேகம் என்பது நல்லது, கெட்டது எது என்று தெரிந்து கொண்டு நல்லதையே தேர்ந்தெடுக்கும் திறமை. சரியாகத் தேர்ந்தெடுத்தால் வாழ்க்கை சரியாக அமையும். தவறாகத் தேர்ந்தெடுக்கும் போதுதான் நாம் பிரச்சனைகளில் மாட்டிக்கொண்டு துன்பப்படுகிறோம். இதை ஆங்கிலத்தில் Error of Judgement என்று குறிப்பிடலாம்.

குருகுலம் ஒன்றில் மாணவர்களுக்கு “நல்லதையே தேர்ந்தெடு, தீமையைத் தவிர்த்து விடு” என்று பாடம் சொல்லிக் கொடுத்துக் கொண்டிருந்த குருவிடம் மாணவன் ஒருவன் “நல்லதையே படைத்த இறைவன்தானே தீயவற்றையும் படைத்திருக்கிறான்; எனவே இறைவன் படைத்த இரண்டில் எதை வேண்டுமானாலும் தேர்ந்தெடுப்பதில் என்ன தவறு” என்று கேட்டான். “மதிய உணவு முடிந்ததும் இதற்கான விடையைத் தருகிறேன்” என்று குரு கூறினார்.

மதிய உணவு எல்லா மாணவர்களுக்கும் போடப்பட்டது. கேள்விகேட்ட மாணவனுக்கு மட்டும் இலையில் சோற்றுக்குப் பதிலாக சாணமும், பாலுக்குப் பதிலாக கோசலமும் பரிமாறப்பட்டது. கேள்வி கேட்ட மாணவன் அதிர்ச்சி அடைந்து, “குருவே! என்ன இது? என் இலையில் மட்டும் சோற்றுக்குப் பதிலாகச் சாணம் வைக்கப்பட்டுள்ளது” என்றான். “சாணம் என்ற உரம் போட்ட பூமியில் விளைவதுதானே அரிசி. அது சமைத்ததும் சோறாகிறது. பால் தரும் பசுவிடம்தான் சாணமும், கோமயமும் வருகின்றன. எனவே எதைச் சாப்பிட்டால் என்ன?” என்று கேட்டார் குரு.

“பாலைக் குடிக்கலாம், கோசலத்தைக் குடிக்க முடியாதே! சோற்றைச் சாப்பிடலாம், சாணத்தைச் சாப்பிட முடியாதே!” என்றான் மாணவன். “இதை எப்படித் தெரிந்து கொண்டாய்” என்று கேட்ட குருவிடம், மாணவன், “என் அறிவினாலும், அனுபவத்தாலும் தெரிந்துகொண்டேன்” என்றான். நல்லதைத் தேர்ந்தெடுத்து தீமையை விலக்கும் ஆற்றல்தான் இறைவன் நமக்குத் தந்த விவேகம்.

தவறான ஆசைகள், அதற்காகத் தெரிந்தெடுக்கும் தவறான முடிவுகள்தாம் பெரும்பாலும் நமது துன்பங்களுக்குக் காரணம். எனவே அறிவினைத் தீட்டி விவேகத்தை வளர்த்து ஆசைகளை வளர்க்காமல், நமக்கு வேண்டிய அவசியமானவற்றை அளவோடு பெற்று ஆனந்தமாக வாழப்பழகுவோம்.

## THE SKILL OF PERCEPTION

Humans were created with some unique senses and skills. Amongst these, one of the superior skills is the power of decision making. During childhood, parents make decisions for the child based on the child's wants and needs. As we grow up, we use this power more often. The experiences we have, whether happy or sad, are simply consequences of our decisions. Darkness had not been created by God. It is simply the absence of light which had been created. Similarly, sin is the absence of virtue. Therefore, we should make decisions in the direction of virtue, and avoid making *errors of judgement* caused by decisions that make us sin. Our desires are the roots of our wrong choices and therefore cause sorrow in the long-term. Therefore, it is wiser to follow a righteous path by selecting and standing by the virtuous path. This decision-making power is most efficient in humans and therefore, we must use it to a maximum.

# தமிழ் இலக்கியமும் இளையோரும்

தமிழ்மொழியில் எத்தனையோ இலக்கியங்கள் உள்ளன. அவற்றை நாம் பாடசாலையில் ஒவ்வொரு வகுப்பிலும் கற்றுள்ளோம். ஆனால், ஏன் அவ்விலக்கியங்களில் இளையோருக்கு பெரிய ஈடுபாடு இல்லை என்ற ஒரு கேள்வி தோன்றியுள்ளது. உலகையே ஆளும் ஆங்கில மொழியோடு ஒப்பிடும்போது, எமது தமிழ்மொழி எவ்வளவு ஒரு செழிப்பான மொழி என்று அறியலாம். இளம் சமுதாயத்துக்கு எமது இலக்கியம் போய்ச்சேராது என்று நான் நினைக்கின்றேன். உங்களின் கருத்து என்ன?

நாம் முன்னேறுவதற்கு, வெற்றிகரமாகத் தங்கள் இலக்கியத்தைப் பரப்புகின்ற ஆங்கிலேயரை உதாரணமாகப் பார்த்து நடக்க வேண்டும்.

புத்தகங்கள் எவ்வளவு இருந்தாலும், அவற்றை வாசிக்கும் பக்குவமும் பொறுமையும் எமக்கு இருக்கிறதா? இல்லை. ஏன்? என் வகுப்பு மாணவர்களையும் அவர்களின் பெற்றோர்களுடன் சேர்ந்து ஒவ்வொரு நாளும் வீட்டில் வாசிக்குமாறு அறிவுறுத்திவருகிறேன். ஆனால், 10 பிள்ளைகளில் மூன்று அலலது நான்கு பிள்ளைகளே வாசித்து வருவார்கள். பெற்றோர்களின் தவறு என்று கூறவில்லை. அது பிள்ளையின் கையிலும் உண்டு. ஆங்கிலக் கல்லூரியில், ஒரு Reading Record System இருப்பதால், மாணவர்கள் வாசிக்கின்றார்கள். அதை நாமும் எம்முடைய தமிழ்ப் பாடசாலையிலே பார்த்துள்ளோம். நடமாடும் நூலகத்தில் சேர்வதற்கு பெற்றோர்கள் தயங்குகிறார்கள். ஆனால், நடமாடும் நூலகத்தில் சேர்ந்துள்ள மாணவர்களே வாசிக்கும் திறனை மேம்படுத்தியுள்ளார்கள். ஆகவே, வாசிப்புப் பயிற்சிக்காக உங்கள் பிள்ளைகளையையும் நடமாடும் நூலகத்தில் சேர்த்துவிடுங்கள். அதுவே, முன்னேறுவதற்கு முதற்காலடி.

ஆனால், ஆசிரியர்களும் இதில் பங்கெடுக்க வேண்டும். தமிழ் கற்பிக்கும் போது, இலக்கியத்தில் இருந்து ஒரு பாட்டைக் கூட அறிமுகப்படுத்தி, அவர்களை மனப்பாடம் செய்ய வைப்பதில்லை. இது ஒரு மாணவனின் கருத்து. இதை ஒப்புக்கொள்ள வேண்டும். ஆதலால், என் போன்ற ஆசிரியர்களும் இப்படிப்பட்ட ஒரு கற்பித்தல் முறையைப் பயன்படுத்த வேண்டும். ஆசிரியர்கள், பெற்றோர்கள், பிள்ளைகள் மூவரும் சேர்ந்து முயற்சி செய்தால் மட்டுமே, இது சாத்தியமாகும்.

அஜந்தன் ஜெயகுமார்
தமிழ் ஆசிரியர் - எசெக்ஸ் தமிழ்க் கழகம்

# TAMIL LITERATURE FOR YOUNGSTERS

From my education at a Tamil School, I learnt that the Tamil language is a linguist's dream choice - it is full of countless works composed over a long time, long before English was even born. As Tamils, we should be proud. Very few languages can compete but can we really be arrogant when a question is arising : is our literature going to survive? Is the younger generation going to carry the baton forward? English, the current King of the world, though poor compared to Tamil, in literature, is able to spread its literature so easily. In my opinion, Tamil literature will not reach the hands of our children or at least their children. What do you say?

In order to progress and for me to be proved wrong, our whole society needs to take steps forward by following English as an example.

We have so many books in our homes; I know many Tamil adults who have Tamil libraries in their houses, including my parents. Yet do we have the patience or the mind to read them? NO. In my class, if I instruct the children to read daily with their parents beside them, only 3 out of the ten (maximum 4) would have done this. But are parents to be blamed? In our normal schools, we use a Reading Record System that is very useful. As a student, I used this system from years 1-6 at my primary school : Newbury Park Primary School. I found this incredibly useful - a clever way to train students to read. The Headteacher of our Tamil school followed this idea by initiating a mobile library system which followed the same principles. Parents are reluctant to join this system. However, it is clear in many classes, that the children who make the most of the system read best. I had a flick through - there are so many genres : Hindu mythology; Greek mythology; football; adventure; action; fables; etc. Why don't you try it out? You don't have to read it fully; just reading a bare minimum of it once a week would be sufficient to make your reading better (#experience).

The teachers also should share this blame. Teachers do not incorporate literature into their teaching. Making children memorise a song from Avvaiyār or at least a Tirukkuṟaḷ from Tiruvaḷḷuvar would prove beneficial. This was a student's perspective. I admit it, and as a teacher, encourage others to follow this. Therefore, children! Please read books from our library. Parents! Please encourage them to read daily. Teachers! Please teach verses. Verses from our literature are very descriptive and contain wise words of advice. Teachers, parents and children must work together to make sure that children develop interest in our Tamil literature.

Ajanthan Jeyakumar
Tamil Teacher - Essex Tamil Society


# கோயில் திருவிழாக்கள் 2017

# Temple Festivals 2017





Walthamstow ஸ்ரீ கற்பக விநாயகர் கோவிலின் தேர்த்திருவிழா.
Walthamstow Sri Katpaga Vinayagar Temple's Chariot Festival.






Ealing ஸ்ரீ கனக துர்க்கை அம்மன் கோயிலின் தேர்த்திருவிழா.
Ealing Shri Kanaga Thurkkai Amman Temple's Chariot Festival.



London ஸ்ரீ முருகன் கோயிலின் தேர்த்திருவிழா.
London Sri Murugan Temple's Chariot Festival.







Enfield நாகபூசனி அம்பாள் ஆலயத்தின் தேர்த்திருவிழா.
Enfield Nagapooshani Ambaal Temple's Chariot Festival.

# KIDS PAGE
## சிறுவர் பக்கம்

| | | |
|---|---|---|
| 1 | ஒன்று | வேறு எந்த மொழியிலும் இல்லாத ஒரு சிறப்பு எழுத்து தமிழில் உண்டு அதுவே 'ழ'. |
| 2 | இரண்டு | தமிழில் இரு வகையான எழுத்து உண்டு எல்லா மொழிகளிலும் அவ்வாறே: உயிர் எழுத்து, மெய் எழுத்து. |
| 3 | மூன்று | தமிழில் மூவகை மெய் எழுத்துக்கள் உண்டு வல்லினம், மெல்லினம், இடையினம் என்பன. |
| 4 | நான்கு | தமிழ் இலக்கியத்தில் நானிலங்கள் உண்டு அவை குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல் ஐந்து எண்பாரும் உள்ளனர். |
| 5 | ஐந்து | தமிழ் இலக்கியங்களில் ஐம்பெருங்காப்பியங்கள் இருக்கின்றன அவை சிலப்பதிகாரம், மணிமேகலை, சீவகசிந்தாமணி, குண்டலகேசி, வளையாபதி. |
| 6 | ஆறு | சுவைகள் ஆறு வகைப்படும் அவை துவர்ப்பு, இனிப்பு, புளிப்பு, காரப்பு, கசப்பு, உவர்ப்பு |
| 7 | ஏழு | பண்டைத் தமிழிசையிலும் ஏழு சுவரங்கள் உண்டு அவை குரல், துத்தம், கைக்கிளை, உழை, இளி, விளரி, தாரம் என்று அழைக்கப்பட்டன. |
| 8 | எட்டு | சங்க இலக்கியங்களில் எட்டுத்தொகை எனும் ஓர் பாடல் தொகுதி உண்டு. |
| 9 | ஒன்பது | இலக்கியங்களில் ஒன்பது வகையான உணர்வுகள் உள்ளன அவை: காதல், நகைச்சுவை, கருணை, கோபம், வீரம், பயம், அருவருப்பு, சாந்தம் |
| 10 | பத்து | சங்கத் தமிழ் இலக்கியத்தில் பத்துப்பாட்டு என்ற தொகுதியும் உண்டு. |

பெயர்: பல்ஹனா அருட்செல்வன்
ஆசிரியர்: அஜந்தன் ஜெயகுமார்

## திருக்குறள்

திருக்குறள்

"அகர முதல எழுத்தெல்லாம் ஆதி
பகவன் முதற்றே உலகு."

தமிழ் மறை என போற்றப்படுவது திருக்குறள். இதனை இயற்றியவர் பொய்யாமொழி புலவராகிய திருவள்ளுவர் ஆவார். திருக்குறள் 133 அதிகாரங்களைக் கொண்டது. ஒவ்வொரு அதிகாரத்திலும் 10 குறள்கள் உள்ளன. எனவே திருக்குறளின் மொத்தத் தொகை 1330 ஆகும். திருக்குறளில் உள்ள நீதிக் கருத்துக்கள் மனிதன் பூமியில் வாழ் வாங்கு வாழும் வழிமுறைகளை வரையறுத்தும் கடவுளை வாழ்த்துதலும், இன் சொல் பேசுதலும், ஒருவர் செய்த நன்றியை நினைவில் கொள்ளுதலும், உண்மை பேசுதலும், கல்வி கற்றலும் போன்ற நற்பண்புகள், எமது வாழ்வை வளம்படுத்துவன. வள்ளுவர் அக் கருத்துக்களை எடுத்துக்கூறும் முறையினை குறள் பாக்கள் மூலம் அறியலாம். தமிழ் கற்போம். தமிழில் பேசுவோம். தமிழராய் வாழ்வோம்.

பெயர்: துலக்சா சுதர்சன்
வளர்நிலை: 2
பாடசாலை: Essex tamil கழகம்
வயது: 7
ஆசிரியர்: திருமதி உமா ஜெயகுமார்




திருவள்ளுவர் திருக்குறளை எழுதி உலக இலக்கிய அரங்கில் தமிழர்கள் பெருமிதமாக எக்காலமும் நிமிர்ந்து நிற்கும்படி செய்த உன்னதப்படைப்பாளி ஆவார்.

திருவள்ளுவர் மறைந்தாலும், அவர் படைத்த நூல், எக்கால மனிதர்களுக்கும் ஓர் வழிகாட்டியாக இருந்து தமிழர்களின் புகழையும் உலகளவில் ஓங்கச் செய்கிறது.

சங்கவி ஜெயச்சந்திரன்

# A1 EUROLANKA

## PARTY DECORATION LTD.








*Weddings ❁ Birthdays ❁ Receptions ❁*
*❁ Puberty Ceremonies ❁ Arangetrams ❁*
*❁ Marquee Hire ❁ Balloons and Décor ❁*
*❁ Maalai & Jadaai Nagam ❁ Bouquets ❁ Cakes ❁ ❁*
*Video & Photo ❁ DJ & Sound*

**அனைத்து மங்கள பைவங்களுக்கும்**
**எங்களை நாடுங்கள்!**

**07946 717 029 – 07908 617 400**


# UNITUTORS

ALL LESSONS CONDUCTED BY UNIVERSITY MEDICAL STUDENTS!

- ψ Key Stage 1 (Year 1-Year 4
  Maths + English
- ψ Key Stage 2 (Year 5 — Year 6 [11+])
  Maths + English + 11+ Training
- ψ Key Stage 3 (Year 7 — Year 9)
  Maths + English + Science
- ψ Key Stage 4 (Year 10 — 11 [GCSE])
  Maths + English + Biology + Chemistry + Physics

11+ Mock Exams
GCSE Mock Exams
Quality Teaching Assured

Contact : 07496 673354
UNITUTORS@OUTLOOK.COM






# துயர் பகிர்வோம்...



## திரு நவரட்ணராசா ராஜகுமார் (1953-2017)

அனைத்துலகத் தமிழ்மொழிப் பரீட்சை நடத்துநராக கடந்த 17 வருடங்களாகப் பணியாற்றிய பெருமகனார் திரு நவரட்ணராசா ராஜகுமார் 12.07.2017 புதன்கிழமை இவ்வுலகை விட்டு மறைந்த செய்தி அனைத்து U.K. தமிழ்ப் பாடசாலைகளுக்கும் பேரிழப்பை ஏற்படுத்தியது என்பது யாராலும் மறுக்க முடியாத ஒன்றாகும். அன்னார் அவர்களுடன் எசெக்ஸ் தமிழ்க் கழகமும் 17 வருடங்களாக தமிழ்ப் பரீட்சை சம்பந்தமான தொடர்பை ஏற்படுத்தியிருந்தது. பிரித்தானியாவில் முதல்முதல் தமிழ்ப் பரீட்சை May 2000இல் 3 மாணவர்களை தயார்படுத்தி அனுப்பி, அடுத்து வரும் வருடம் 7 மாணவர்களை அனுப்பி, 300 மாணவர்களுக்கு மேல் பரீட்சைக்குத் தயார்படுத்தி இன்றும் அனுப்பிக்கொண்டிருக்கிறது என்பது எசெக்ஸ் தமிழ்க் கழகத்தின் வளர்ச்சிப் பதிவுகளில் குறிப்பிடத்தக்கது. ஆரம்ப காலத்தில், இத்தமிழ் மொழிப் பரீட்சையையோ அல்லது பாடநூல்களையோ அனுமதிக்காத பாடசாலைகளும் லண்டனில் இருந்தன என்பதும் உண்மையான விடயங்கள். இன்றைய தமிழ்ப் பரீட்சையின் வளர்ச்சிக்கு, இங்கிலாந்தின் அடிக்கற்கள் Hounslow Tamil Kalvikoodam மற்றும் Essex Tamil Society ஆவன. இப்பரீட்சைச் செயற்பாடே தமிழ்ப் பாடசாலைகளின் வளர்ச்சிக்கும் உருவாக்கித்துக்கும் ஒரே எடுத்துக்காட்டாக அமைந்தது. 5000க்கும் மேற்பட்ட மாணவர்கள், இன்று UKஇல் தமிழ்ப் பரீட்சையில் பங்குகொள்வதற்கு தன்னை அற்பனித்த தியாக சீலன் ராஜகுமாரின் பெரும் பங்களிப்புத்தான் காரணம். ஆலமரம் போல் வளர்ந்து காட்சி கொடுத்த தமிழ்மொழிப் பரீட்சை கடந்த சில ஆண்டுகள் கண்பட்டதுபோல் பிரிவுபட்டு செயல்பட்டு கொண்டிருக்கிறது. அடிப்படை உண்மைகளை அறிந்த எசெக்ஸ் தமிழ்க் கழகம் திரு ந. ராஜகுமாரின் தலைமையின் கீழ் தொடர்ந்தும் ஈடுபாட்டுடன் செயல்பட்டுக் கொண்டிருக்கிற்து. திரு ந. ராஜகுமார் அவர்கள் எசெக்ஸ் தமிழ்க் கழகத்தின் மாணவர்களுக்காக வேண்டிய பாடநூல்களையோ அறிவுறுத்தல்களையோ காலநேரம் பார்க்காமல் தந்துதவி இருக்கிறார். எமது மாணவர்கள் தமிழ்மொழிப் பரீட்சையை எமது பாடசாலையிலேயே எழுதுவதற்கு முழு ஒத்துழைப்பையும் தந்தமை மறக்கமுடியாத சேவை. கடந்த 13.03.2017 கலைவிழாவில் மாணவர்களுக்கு கடந்த கால பரீட்சைகளின் சான்றிதழ்களைத் தகுந்த நேரத்தில் கையளிக்க வேண்டும் என்பதற்காக 12.03.2017, நேரிலேயே கொண்டுவந்து தந்துவிட்டுச் சென்றவர் தான் இவர். அன்றுதான் அவரின் கடைசியான சந்திப்பு என்பதை இறைவன் வகுத்துவிட்டான். அன்னாரின் சேவைகளை எசெக்ஸ் தமிழ்க் கழகத்தின் வரலாற்றில் நீங்காத நினைவுகளாக என்றும் இருக்கும். திரு ந. ராஜகுமார் அவர்களின் மனைவி, பிள்ளைகளுக்கு எமது கழகத்தின் சார்பான ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கிறோம். அவரின் ஆத்மா சாந்தி அடைய பிரார்த்திப்போம். ஓம் சாந்தி. ஓம் சாந்தி. ஓம் சாந்தி.

திருமதி உமா ஜெயகுமார்
**தமைமை ஆசிரியை**